தமிழாசிரியர்களுக்கு ,

மொழிப்பாட ஆசிரியர்களுக்குப் பாட ஆசிரியர்களை விட பொறுப்பும், கடமையும் அதிகமானது என்றே கூறலாம். அதிலும் தாய்மொழிப்பாட ஆசிரியர்களின் பணிக்குப் பிற ஆசிரியர்களை விட அதிக முக்கியத்துவம் உள்ளது.

2013 பத்தாம் வகுப்பிற்கான அரசு பொதுத்தேர்வு முடிவுகளில் பிற பாடங்களோடு ஒப்பிடுகிறபோது தமிழ்ப்பாடத்தில் தேர்ச்சி சதவீதம் சற்றே குறைவாக உள்ளது மிகவும் வருந்தத்தக்கது.

அதிகம் மனனம் செய்யும் பாடப் பகுதிகளைக் கொண்ட தமிழ் முதல் தாளில் மாணவ, மாணவியர்கள் அதிக மதிப்பெண்களைப் பெறுவதும் குறைந்த அளவு மனனம் செய்யும் பாடப் பகுதிகளைக் கொண்ட தமிழ் இரண்டாம் தாளில் மாணவ மாணவியர்கள் குறைந்த மதிப்பெண்களைப் பெறுவதும் சற்றே வித்தியாசமானது மட்டுமல்ல, தமிழாசிரியர்கள் ஒவ்வொருவரும் முழுமையாக உற்று நோக்கத்தக்கது ஆகும்.

இந்நூலில் தமிழ் இரண்டாம் தாளுக்கு முதல் 50 மதிப்பெண்களுக்கு வகைப்படுத்தியுள்ள வினாக்களுக்கு தொடர்பயிற்சி அளித்தாலே மாணவர்கள் எளிமையாய் உயர்ந்த மதிப்பெண்களை பெற முடியும். வரும் காலங்களில் இந்த 50 மதிப்பெண்களுக்குரிய பயிற்சிகளை 9ம் வகுப்பிலேயே அளிக்கலாம்.

தமிழ் இரண்டாம் தாளுக்கு நாம் தரும் முக்கியத்துவம் பாடத்தின் தேர்ச்சி சதவீதத்தை மட்டுமல்ல, நாம் சார்ந்திருக்கும் பள்ளியின் தேர்ச்சி சதவீதத்தையும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

எளிமையான பாடப்பகுதியில் எளிமையான வினாக்களின் அடிப்படையில் பயிற்சியளிக்கும் முறை இங்கே வரிசைப்படுத்தித் தரப்பட்டுள்ளது. அரையாண்டுத் தேர்வில் மாணவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில் அவர்களை வகைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள வகைப்பாட்டின்படி அவர்களுக்குத் தொடர்பயிற்சி அளித்திடல் வேண்டும்.

www.waytosuccess.org

# தமிழ் முதல் தாள்

## மெல்லக் கற்போர்க்கு கீழ்க்கண்ட வினா அமைப்பு முறையிலே பயிற்சி அளிக்க வேண்டும்

| வ. எண் | தலைப்பு | வினா எண் | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளி (செய்யுள்) | 45 | 5 |
| 2 | உரையை பகுதியாய் படித்து வினாக்களுக்கு விடையளி (உரைநடை) | 46 | 5 |
| 3 | குறுவினா (உரைநடை) | 28 முதல் 34 வரை | 10 |
| 4 | குறுவினா (செய்யுள்) | 21 முதல் 27 வரை | 10 |
| 5 | சிறுவினா (உரைநடை) | 40 முதல் 44 வரை | 12 |
| 6 | சிறுவினா (செய்யுள்) | 35 முதல் 39 வரை | 12 |
| 7 | நெடுவினா (உரைநடை) | 48 | 8 |
| 8 | நெடுவினா (செய்யுள்) | 47 | 8 |
| 9 | மணப்பாடப்பகுதி | 49 | 10 |
| 10 | ஒரு மதிப்பெண் வினா (சரியான விடையளி) | 1 முதல் 20 வரை | 20 |

www.waytosuccess.org

செய்யுள் - குறுவினா - வினா எண் 21 முதல் 27 வரை

| இயல் | தலைப்பு | பக்க எண் | வினா |
|---|---|---|---|
| 1 | திருக்குறள்,<br>ஏலாதி | 10<br>12 | 14<br>3 |
| 3 | கம்பராமாயணம் | 66 | 5 |
| 5<br>6 | பெரியபுராணம்<br>தமிழ்விடுதூது | 112<br>127 | 8<br>3 |
| 7 | திருக்குறள்<br>தேவாரம் | 154<br>156 | 7<br>2 |
| 9 | கலித்தொகை<br>நந்திக்கலம்பகம்<br>நாலாயிர திவ்ய பிரபந்தம் | 203<br>205<br>206 | 3<br>4<br>2 |
| | மொத்தம் | | 51 |

உரைநடை - குறுவினா - வினா எண் 28 முதல் 34 வரை

| இயல் | தலைப்பு | பக்க எண் | வினா |
|---|---|---|---|
| 1 | உயர்தனி செம்மொழி | 17 | 5 |
| 5<br>6 | திரைப்படக்கலை<br>தொன்மைத் தமிழகம் | 117<br>113 | 3<br>2 |
| 7 | தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள் | 161 | 2 |
| 8 | காந்தியம் | 186 | 8 |
| 9 | திருவருட் பிரகாச வள்ளலார் | 212 | 4 |
| 10 | பல்துறை வேலை வாய்ப்புகள் | 235 | 4 |
| | மொத்தம் | | 28 |

www.waytosuccess.org

செய்யுள் - சிறுவினா - வினா எண் 35 முதல் 39 வரை

| இயல் | தலைப்பு | பக்க எண் | வினா |
|---|---|---|---|
| 2 | சிலப்பதிகாரம் | 32 | 4 |
| 3 | கம்பராமாயணம் | 67 | 3 |
| 4 | நற்றிணை<br>புறநானூறு | 89<br>89 | 1<br>1 |
| 8 | சீறாப்புராணம் | 180 | 3 |
| 10 | நிற்க நேரமில்லை | 231 | 1 |
| | மொத்தம் | | 13 |

உரைநடை - சிறுவினா - வினா எண் 40 முதல் 44 வரை

| இயல் | தலைப்பு | பக்க எண் | வினா |
|---|---|---|---|
| 2 | பெரியாரின் பெண்விடுதலை சிந்தனைகள் | 44 | 3 |
| 3 | அண்ணல் அம்பேத்கார் | 73 | 2 |
| 4 | பேச்சுக்கலை | 93 | 3 |
| 6 | தொன்மை தமிழகம் | 132 | 2 |
| 8 | காந்தியம் | 186 | 3 |
| | மொத்தம் | | 13 |

நெடுவினாவைப் பொறுத்தவரை செய்யுளில் திருக்குறள் அல்லது கதைப்பகுதி கொண்ட செய்யுள் பகுதிகளில் வினாக்களைத் தேர்ந்தெடுத்து முழுமையாக பயிலச் சொல்லலாம். உரைநடைப் பகுதியில் முதல் அல்லது இறுதிநிலை பாடங்களைத் தேர்ந்தெடுத்து நெடுவினாக்களை பயிலச் சொல்லலாம்.

www.waytosuccess.org

**பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளி :**

**நற்றிணை**

அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழும் ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்ட பற்பல
மீனொரு பெயரும் யாணர் ஊர
நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென் பதுவே

**வினா விடை**

1. **இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?** – நற்றிணை
2. **நற்றிணை எந்த நூல்களைச் சார்ந்தது ?** – எட்டுத்தொகை
3. கீழ்க்கண்ட சொற்களின் பொருள் தருக.
   **யாணர்** – புதுவருவாய் ; **செறு**–வயல் ; **அரி**–நெற்கதிர் ;
   **வட்டி**– பனையோலைப்பெட்டி ; **நெடியமொழிதல்** –அரசரிடம் சிறப்பு பெறுதல்
4. கீழ்கண்ட சொற்களைப் பிரித்து எழுதுக.
   **பற்பல** – பல + பல ; **அங்கண்** – அம் + கண் ; **புன்கண்**– புன்மை + கண்
   **மென்கண்** – மென்மை + கண்
5. `நல்' எனும் அடைமொழி பெற்ற நூல் எது ? – நற்றினை
6. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார் ? – பன்னாடு தந்த மாறன் வழுதி
7. இப்பாடலின் ஆசிரியர் யார் ? – மிளைகிழான் நல்வேட்டனார்
8. கீழ்க்கண்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு தருக.
   **சென்ற வட்டி** – பெயரெச்சம் ; **செய்வினை** – வினைத்தொகை
   **புன்கண், மென்கண்** – பண்புத்தொகைகள் ; **ஊர (ஊரனே)** – விளித்தொடர்

**புறநானூறு**

பொன்னும் துகிரும் முத்தும் பன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒரு வழித்தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆகுபவே
சாலார் சாலார் பாலர் ஆகுபவே

**வினா விடை**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ? – புறநானூறு
2. புறநானூறு எந்த நூல்களைச் சார்ந்தது ? – எட்டுத்தொகை
3. இப்பாடலின் ஆசிரியர் யார் ? – கண்ணகனார்
4. பொருள் கூறுக
   **துகிர்** – பவளம் ; **தொடை** – மாலை ; **மன்னிய** – நிறைவற்ற ; **கலம்** – அணி
5. பிரித்து எழுதுக.
   **அருவிலை** – அருமை + விலை ; **நன்கலம்** – நன்மை + கலம்
6. இலக்கணக் குறிப்பு:
   **பொன்னும், முத்தும், துகிலும்** – எண்ணுமைகள் ;
   **மாமாலை** – உரிச்சொற்றொடர் ; **அருவிலை, நன்கலம் – பண்புத்தொகை**
7. சான்றோர் யார் பக்கம் சேர்வர் ? – **சான்றோர் பக்கம்**
8. சான்றாண்மை இல்லாதவர் யார் பக்கம் சேர்வர் ? – **தீயவர் பக்கம்**

www.waytosuccess.org

**தமிழ் விடு தூது**

**கீழ்காணும் பாடலை படித்து வினாக்களுக்கு விடையளி:**

அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாகும் உண்டோ தமிழே – விரிவார்
திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்
புகழ்பா வினங்கள்மடைப் போக்கா – நிகழவே

**வினா விடை**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ? **– தமிழ் விடு தூது**
2. இப்பாடலில் உனக்கு என்பது எதைக் குறிக்கும் ? **– தமிழைக் குறிக்கும்**
3. நால்வகைப் பாக்கள் யாவை ? **– வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா**
4. இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகைகள் ? அரியாசனம் – சரியாகும்
5. அரியாசனம் – பொருள் கூறுக **சிங்காதனம்**
6. தமிழ் என்ற வயலின் மடைகள் யாவை ? **– துறை, தாழிசை, விருத்தம்**

நல்லேரி னால்செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச்
சொல்லோர் உழவர் தொகுத்தீண்டி – நல்லநெறி
நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச்செய் விக்குநாள் – மேலோநில்

**வினா விடை**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ? **– தமிழ் விடு தூது**
2. இப்பாடலின் ஆசிரியர் யார் ? **– பெயர் அறியப்படவில்லை**
3. நாற்கரணங்கள் யாவை ? **– மனம், புத்தி, சித்தம், அகங்காரம்**
4. சொல்லேர் உழவர் யாவர் ? **– புலவர்கள்**
5. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகை யாவை ? **நல்லேரினால் – சொல்லோர், நாலே – மேலே**
6. தமிழ் என்ற வயலின் விதைகள் யாவை ? **வைதருப்பம்,கௌடம்,பாஞ்சாலம், மாகதம்**
7. தமிழ் என்ற வயலின் விளைபொருள்கள் யாவை ? **அறம், பொருள், இன்பம், வீடு**

பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லி ஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோதட்கொளும் – சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாயீத்துார் – கட்டி

**வினா விடை**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ? **– தமிழ் விடு தூது**
2. இப்பாடலில் வரும் புலவர்கள் பெயர்களை எழுதுக ?
   **அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரார், ஒட்டக்கூத்தர்**
3. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் யார் ? **–அதிவீரராம பாண்டியன்**
4. சீத்தையார் – பொருள் கூறுக. **கீழானவர்(அ) போலிப்புலவர்**
5. இப்பாடலில் வரும் அடி எதுகையை எழுதுக.
   பாத்தனதாக் குட்டி ; கூத்தனிவர் வெட்டி

குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்துார் – கட்டி
வளர்ந்தனை பால்முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத்து – இளங்கனியாய்

**வினா விடை**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ? **– தமிழ் விடு தூது**
2. இப்பாடலின் ஆசிரியர் யார் ? **– பெயர் அறியப்படவில்லை**
3. செவியறுத்து – பிரித்து எழுதுக **– செவி + அறுத்து**
4. நாளிகேரம் – பொருள் எழுதுக. **– தென்னை**
5. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகை – குட்டி, வளர்ந்தனை
   வெட்டி , கிளர்ந்தகரும்

www.waytosuccess.org

தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துறைக்கும்
விண்ணப்படும் உண்டு விளம்பக்கேள்

**வினா விடை**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ? – **தமிழ் விடு தூது**
2. முத்தமிழ் –விரித்தெழுதுக. **மூன்று + தமிழ்** (இயல், இசை, நாடகம்)
3. விளம்பக்கேள் – பொருள் கூறுக. – **கேட்பாயாக**
4. உன்னோடு வந்துரைக்கும் பிரித்து எழுதுக. **உன்னோடு + வந்து + உரைக்கும்**
5. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைகளை எடுத்து எழுதுக.
   தி**த்**திக்கும் உ**ண்ண**ணப்படும் / மு**த்**தி வி**ண்ண**ணப்பம்

**கலித்தொகை**

ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வெளவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்

**வினா விடை**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ? – **கலித்தொகை**
2. கலித்தொகை எந்த நூல்களுள் ஒன்று ? – **எட்டுத்தொகை**
3. கலித்தொகையை எவ்வாறு சிறப்பித்து கூறுவர் ? – **கற்றறிந்தோர் ஏத்தும் கவி**
4. கலிப்பா எவ்வோசை பெற்று வரும் ? – **துள்ளல் ஓசை**
5. சொற்பொருள் கூறுக.
   கிளை – **சுற்றம்** நோன்றல் – **பொறுத்தல்**
6. பிரித்தெழுதுக.
   அன்பெனப்படுவது–**அன்பு+எனப்படுவது** ;பண்பெனப்படுவது– **பண்பு + எனப்படுவது**
7. இலக்கணக் குறிப்பு தருக. ஒழுகுதல், நோன்றல், பொறுத்தல் – **தொழிற்பெயர்**
8. இப்பாடலின் ஆசிரியர் யார் ? – **நல்லந்துவனார்**

**நந்திக் கலம்பகம் (நந்திமன்னன் வீரம்)**

பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு
பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு
காவிரி வளநாடா
நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யுடைநந்தி
மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
வானகம் ஆலுவாரே

**வினா விடை**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ? – **நந்திக் கலம்பகம்**
2. இப்பாடலின் ஆசிரியர் யார் ? – **பெயர் அறியப்படவில்லை**
3. சிற்றிலக்கியங்கள் மொத்தம் எத்தனை ? – **தொண்ணூற்றாறு**
4. சொற்பொருள் தருக.
   1.புயல் – **மேகம்** 2. பணை– **மூங்கில்** 3.பகரா – **கொடுத்து** 4.பொருது –**மோதி**
   5.நிதி – **செல்வம்** 6.புனல் – **நீர்** 7. கவிகை – **கொடை** 8.வானகம்–**தேவர் உலகம்**
5. கலம்பகம் எவ்வகை இலக்கியங்களுள் ஒன்று ?

www.waytosuccess.org

**தொண்ணூற்றாறு** வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று

6. இலக்கணக் குறிப்பு தருக
பொழிதருமணி, பணைதருமணி, வருபுனல், நிதிதருகவிகை – **வினைத்தொகைகள்**
7. கலம்பக உறுப்புகள் எத்தனை ? – **பதினெட்டு (18)**
8. பிரித்தெழுதுக
கலம்பகம் = கலம் + பகம் ; கலம் = பன்னிரெண்டு ; பகம் = ஆறு
9. இப்பாடலில் பயின்று வரும் திணை யாது ? – **பாடாண் திணை**

**நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**

மீன்நோக்கம் நீலூவயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
    பானோக்கா யாகிலுமுன் பற்றலல்லால் பற்றில்லேன்
தானோக்கா எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
    கோனாக்கி வாழுங் கடிபோன் றினந்தேனே

**வினா விடை**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ? – **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**
2. இப்பாடலின் ஆசிரியர் யார் ? – **குலசேகர ஆழ்வார்**
3. சொற்பொருள் தருக.
   1. மீன் நோக்கம் – **மீன்கள் வாழும்** 2.தார்வேந்தன் – **மாலையணிந்த அரசன்**
   3. கோல்நோக்கி – **செங்கோல் செய்யும் அரசனை நோக்கி**
   4. என்பால் – **என்னிடம்** 5.தார் – **மாலை**
4. இலக்கணக் குறிப்பு எழுதுக.
   1. நோக்காய் – முன்னிலை ஒருமை வினைமுற்று
   2. கோல்நோக்கி – இரண்டாம் வேற்றுமை
   3. தார்வேந்தன் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை
   4. வாழும்குடி – பெயரெச்சம்
5. பிரித்தெழுதுக
   1. பற்றில்லேன்– **பற்று + இல்லேன்** ; 2.போன்றிருந்தேன் –**போன்று + இருந்தேன்**
6. ஆழ்வார்கள் எத்தனை பேர் ? – **பன்னிரெண்டு**
7. பெருமாள் திருமொழியில் உள்ள பாசுரங்கள் எத்தனை ? – **நூற்றி ஐந்து பாசுரங்கள்**

**நிற்க நேரமில்லை**

சீக்கிரம் செல்லுக நேர்வழியில் – அதைச்
    செத்தைகள் கூடியே தூர்க்குமுன்னே
நோக்கிய அத்திசை நேர்த்திசையில் – துளிச்
    சோம்பது மின்றி நடை யிடும்
கால்கள் இரண்டு படைத்தவநீ – பெருங்
    கல்லும் மலையும் கடப்பதற்கே
மேலிரு கைகள் அவைகளுண்டே – அங்கு
    விம்மும் புதர்கள் அறுப்பதற்கே
கண்ணிரன் டுள்ளான முன்னடக்க – இரு
    காதுகள் உண்டு துணைவரவே
விண்களைக் கீறிவழி சமைக்க – உன்றன்
    வீர மனமுண்டு செல்லுகவே !
இன்றிளைப் பாறுவம் என்றிருந்தால் – வழி
    என்னென்ன வாகுமோ ஓரிரவில்
சென்றிளைப் பாறுக முற்றிடத்தே – தம்பி
    தேன்வந்து பாயும்வன் நெஞ்சிடத்தே !
சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே – இங்கு
    நல்லசெடி இளைப் பாறிடுமோ !
வேதனை யாவும் மறந்ததுபார் – செடி
    வெற்றி கொண்டேந்திய பூவினிலே

**வினா விடை**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ? – **நிற்க நேரமில்லை**
2. இப்பாடலின் ஆசிரியர் யார் ? – **சாலை இளந்திரையன்**
3. இப்பாடலில் எந்தக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது – **“பூத்தது மானுடம்”**
4. சொற்பொருள் தருக.
   1. செத்தை – **குப்பைகூளம்** ; 2. இளைப்பாறுதல் – **ஓய்வெடுத்தல்**
5. பிரித்தெழுதுக
   1. கண்ணிரெண்டு – **கண் + இரண்டு** ; 2.ஓரிரவு – **ஓர் + இரவு**

**வினா எண்: 46**

**கொடுக்கப்பட்ட உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்**

குறிப்பு **பத்து உரைநடைப் பாடங்களுள் ஏதேனும், ஒரு பத்தி கொடுத்து 5 வினாக்கள் கேட்கப்படும்.**

**வினா எண். 28 முதல் 34 வரை**

**உரைநடை குறுவினா**

**பிரிவு – II பகுதி – 2**

1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை ?
2. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது ?
3. ஒரு மொழி நிலைபெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை ?
4. மொழி மாற்றம் என்றால் என்ன ?
5. கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை ?
6. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை ?
7. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை ?
8. ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக
9. கண்ணிடந்து அப்பியவர் யார் ? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது ?
10. அமெரிக்க இதழாசிரியரிடம் காந்தியடிகள் பற்றிப் பெண்மணி கூறியது யாது ?
11. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது ?
12. இயேசுவின் மலைப்பொழிவு நூலைப் படித்துக் காந்தியடிகள் உணர்ந்தது என்ன ?
13. காந்தியடிகளுக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை ?
14. காந்தியடிகள் அறவழிப்போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை ?
15. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார் ?
16. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது ?
17. இராமலிங்கர் எங்கு எப்போது பிறந்தார் ?
18. சத்திய தருமச் சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது ?
19. வளரும் பிள்ளைகளுக்கு இராமலிங்கர் வழங்கிய அறிவுரைகளுள் இரண்டனைக் கூறுக.
20. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும் ?
21. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில் நுட்பத் துறைகள் யாவை ?
22. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கனை எழுதுக.

**உரைநடை குறுவினா**

**அதிக மதிப்பெண் பெற பாடப்புத்தகத்தில் உள்ள பிற வினாக்களையும் படித்துகொள்ளவேண்டும்**

**வினா எண். 21 முதல் 27 வரை**

**செய்யுள் குறுவினா**

**பிரிவு – II**

**பகுதி – 1**

**வினாக்கள்**

1. உயிரினும் ஓம்பப்படுவது எது ? ஏன் ?
2. நன்றிக்கு வித்தாவது எது ?
3. என்றும் இடும்பபை தருவது எது ?
4. ஞாலம் கருதினும் கைகூடும் எப்போது ?

www.waytosuccess.org

5. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?
6. பாரதிதாசன் திருவள்ளுவரை எவ்வாறு புகழ்ந்துள்ளார் ?
7. ஏலாதி – நூற்குறிப்பு எழுதுக.
8. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை ? யாருக்குக் கொண்டு சென்றான் ?
9. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான் ?
10. குகனின் வேண்டுகோள் யாது ?
11. "அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்" – யார் யாரிடம் கூறியது ?
12. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர் ?
13. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார் ?
14. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன ?
15. "இப்போது இங்கு அவன் உதவான்" யார், யாரிடம் கூறியது ?
16. வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை ?
17. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடு தூது கூறுவன யாவை ?
18. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர்
19. வன்மையுள் எல்லாந் தலையாயது எது ?
20. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார் ?
21. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது ?
22. வேந்தற்குரிய பொருள்கள் யாவை ?
23. ஆற்றுதல் என்பது யாது ?
24. பண்பு எனப்படுவது யாது ?
25. அறிவு எனப்படுவது யாது ?
26. கலம்பக நூல்களுள் முதல் நூல் எது ?
27. கலம்பக உறுப்புகள் நான்கினை எழுதுக.
28. நந்திக் கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது ?
29. நந்திவர்மன் வீரம் எத்தகையது ?
30. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன ?
31. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர் ?

**அதிக மதிப்பெண் பெற விரும்புவோர் பாடப்புத்தகத்தில் உள்ள பிற வினாக்களையும்படித்து கொள்க**

**வினா எண். 40 முதல் 44 வரை**

**உரைநடை சிறுவினா**

**பிரிவு – III பகுதி – 2**

1. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துக்கள் யாவை ?
2. பெண்ணுரிமையை விளக்குக.
3. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை ?
4. அம்பேத்கார் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை ?
5. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கார் ஆற்றிய பணி யாது ?
6. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும் ?
7. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.
8. கடல் வாணிகம் குறித்து எழுதுக.
9. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது ? விளக்குக.
10. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

**அதிக மதிப்பெண் பெற விரும்புபவர்கள் பாடப்புத்தகத்தில் உள்ள பிற வினாக்களையும் படித்துக் கொள்ள வேண்டும்.**

**வினா எண். 35 முதல் 39 வரை** **3 x 4 = 12**

**செய்யுள்**

**சிறுவினா**

1. வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான் ?

www.waytosuccess.org

2. கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுதுக.
3. கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது ?
4. கம்பராமாயணம் – சிறு குறிப்பு எழுதுக.
5. விருத்த மாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?
6. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?
7. சீறாப்புராணம் குறிப்பு எழுதுக
8. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை ?
9. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

**3 x 4 = 12**

**அதிக மதிப்பெண் பெற விரும்புபவர்கள் பாடப்புத்தகத்தில் உள்ள பிற வினாக்களையும் படித்துக் கொள்க**

**வினா எண். 48** **உரைநடை நெடுவினா**

**பிரிவு – V பகுதி – 1**

1. செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.
2. தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.
3. கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்க

**வினா எண். 47** **2 x 8 = 16**

**செய்யுள் நெடுவினா**

1. “தேரா மன்னா” என விளித்துக் கண்ணகி கூறியன யாவை ?
2. கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.
3. பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
4. பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**வினா எண். 49 பாடப்புத்தகத்தில் உள்ள மனப்பாடப் பகுதி அனைத்தையும் படித்துக் கொள்ள வேண்டும்.**

**முதல் தாள்- (புறவய வினாக்கள்)**

**பிரிவு-I (மதிப்பெண்கள்-20)**

**பகுதி- I (6 மதிப்பெண்கள்)**

1. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் .........
2. திருக்குறள் .......... வெண்பாக்களால் ஆன நூல்.
3. ‘இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே’ எனப் பாடியவர் ............
4. ஏலாதி ............... நூல்களுள் ஒன்று.
5. கணிமேதாவியாரின் காலம் .........
6. மருந்துப் பொருட்களால் அமையப்பெற்ற இரு நூல்கள் ….. , ………..
7. இளங்கோவடிகள் ............. நாட்டைச் சேர்ந்தவர்.
8. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனப் பாடியவர் .........
9. குடும்ப விளக்கு……. படைத்த குறுங்காவியங்களுள் ஒன்று.
10. பாரதிதாசனார் .......... என அழைக்கப்படுகிறார்.
11 கம்பராமாயணம் ......... காண்டங்களைக் கொண்ட நூல்.
12 சரசுவதி அந்நாதி ...... இயற்றிய நூல்களுள் ஒன்று.
13 கம்பரைப் புரந்தவர் ......
14 நல் எனும் அடைமொழ பெற்ற நூல் .........
15 நற்றிணையைத் தொகுப்பித்தவர் ............
16 நற்றிணை .......... நூல்களைச் சேர்ந்தது.
17 சேக்கிழார் பெருமான் அருளியது ……..……
18 தம் வீட்டில் உள்ள அனைத்துப் பொருட்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் …
19 “பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ” எனப் பாடியவர் .........

www.waytosuccess.org

20 இல்லாரை ...................... எள்ளுவர்.
21 திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் .................
22 அரியவற்றுள் எல்லாம் அரிது ...... பெரியாரைப் பேணித் தமராக் கொளல்.
23 முதலிலார்க்கு ........................... ஈல்லை.
24 திருகாவுக்கரசர் காலம் ...............ஆம் நூற்றாண்டு.
25 "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் பாடல் ............ 'அச்சமில்லை அச்சமில்லை' எனப் பாடத் தூண்டியது.
26 சீறாப்புராணம் .................. காண்டங்களை உடையது.
27 கேழல் என்பதன் பொருள் ............
28 கலித்தொகை ............... நூல்களுள் ஒன்று.
29 நெய்தல் கலியைப் பாடியவர் .................
30 போற்றாரைப் பொறுத்தல் என்பது ............
31 நந்திக்கலம்பகம் ............ வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
32 பணை என்னும் சொல்லின் பொருள் ...............
33 பெருமாள் திருமொழியில் ............ பாசுரங்கள் உள்ளன.
34 குலசேகராழ்வார் பாடல் ......... தொகுப்பில் உள்ளது.

## உரைநடை (வினா எண்கள் 3-6 மதிப்பெண்கள்=3)

35 பதினாறு செவ்வியல் தனமைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர் .........
36 இன்றைய மதுரையில் .................. தமிழ்ச்சங்கம் இருந்தது.
37 அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் தலைகீழ் புரட்சி ஏற்படும் என்றவர் .........
38 பெண் அடிமையானதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ......இல்லாமை.
39 1918ல் மும்பையில் அம்பேத்கார் சிறிது காலம் ...... பேராசிரியராகப் பணியாற்றினார்.
40 அம்பேத்காருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ............
41 நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரியகலை ............
42 மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் ..................
43 பண்ணொடு தமிழொப்பாய் எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல் ............
44 உலகம் என்ற தமிழ்சொல் ......... என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது.
45 தமிழர்கள் நிலத்தை ..................... வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
46 காந்தியடிகள் ...... நாடகத்தைப் பார்த்து உண்மை பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.
47 பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல் .........
48 அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை ............ , .........
49 "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் ...
50 வள்ளலாரின் இயற்பெயர் .....................
51 பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி ............
52 'விரல்கள் பத்தும் மூலதனம்' என்னும் பாடலின் ஆசிரியர் ......

## விடைகள்

1. திருவள்ளுவமாலை 2. குறள் 3. பாரதிதாகன் 4. பதினெண்கிழ்க் கணக்கு 5. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு 6. திரிகடுகம், ஏலாதி 7. சேர 8. பாரதியார் 9. பாரதிதாசன் 10. புரட்சிக் கவிஞர் 11. ஆறு 12. கம்பர் 13. சடையப்ப வள்ளல் 14. நற்றிணை 15. பன்னாடு தந்த மாறன் வழுதி 16. எட்டுத்தொகை 17. பெரியபுராணம் 18. ஆப்பூதியடிகள் 19. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் 20. எல்லாரும் 21. மூத்த அறிவுடையார் 22. பெரியாரைப் 23. ஊதியம் 24. கி.பி.ஏழாம் 25. பாரதியாரை 26. மூன்று 27. பன்றி 28. எட்டுத்தொகை 29. நல்லந்துவனார் 30. பொறை 31. 96 32. மூங்சில் 33. 105 34. திருவியற்பா 35. பாவாணர் 36. மூன்றாம் 37. பெரியார் 38. சொத்துரிமை 39. பொருளியல் 40. பாரத ரத்னா 41. பேச்சுக்கலை 42. பேரறிஞர் அண்ணா 43. தேவாரம் 44. உலவு 45. 5 46. அரிச்சந்திரன் 47. பைபிள் 48. எளிமை, சிக்கனம் 49. பெரிய புராணம் 50. இராமலிங்கர் 51. 12ம் வகுப்பு 52. துாராபாரதி

www.waytosuccess.org

**பகுதி- II (6 மதிப்பெண்கள்)**

**செய்யுள் பகுதி (வினா எண்கள் 7-9 மதிப்பெண்கள்=3)**

1. மாணிக்கவாசகர் பிறந்நத ஊர் ............
2. மாணிக்கவாசகர பாடல்கள் ...... திருமுறையில் இடம் பெற்றுள்ளன.
3. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் ............உள்ளது.
4. மாணிக்கவாசகர .........மன்னனிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றினார்.
5. ஜி.யு.போப் திருவாசகத்தை .................. மொரியல் மொழி பெயர்த்தார்.
6. திருவாசகத்திற்கு உருகார் ......... உருகார்.
7. திருக்குறளில் .... அதிகாரங்களும் ......... குறட்பாக்களும் உள்ளன.
8. திருக்குறள் ......, ......, ......முதலான உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
9. ஒழுக்கத்தின் எய்துவர் ............
10. இழுக்கத்தின் எய்துவர் .....................
11. இரட்டைக் காப்பியங்கள் என்பன .........
12. சிலப்பதிகாரம், மணிமேகலை, ..., வளையாபதி, ...என்பன ஐம்பெருங்காப்பியங்கள்.
13. நற்றிணை ......... சிற்றெல்லையும் ............ பேரெல்லையும் கொண்டது.
14. அரி என்னும் சொல்லின் பொருள் .....................
15. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் ..................
16. போலிப் புலவர்களைத் தலையை வெட்டுபவர் ..................
17. அறனீனும் இன்பமும் ஈனும் ..................... தீதின்றி வந்த பொருள்.
18. திருநாவுக்கரசர் தமக்கையார் ........................ ஆவார்.
19. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் ........................... என அழைக்கப்படுகிறது.
20. சீறாப்புராணத்தை இயற்றியவர்...........................
21. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் ...........................
22. தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் ........................ போன்றிருந்தேனே.
23.நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் ........................ குலசேகரர் பாடியதாகும்.

**உரைநடை (வினா எண்கள் 10-12 மதிப்பெண்கள்-3)**

23. தமிழர் மனித வாழ்வை ............, .................. எனப் பிரித்தனர்.
24. குமரிக் கண்டத்தில் தோன்றிய மனிதன் பேசிய முதல் தொழி ..................
25. 2004ம் ஆண்டு ...... திங்களில் தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.
26. தமிழ் மிகவும் பண்பட்ட மொழி எனக் கூறியவர் ..................
27. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள ..................... பெருநோய் ஒன்று உணடு.
28. பெரியார் சமூக ......... எதிர்த்தவர்: மூடக்கறுத்துகளை .........
29. வெறும் பேச்சுக்கும் ............... பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.
30. பேச்சு முடிவில் ......... கூறிக் கருத்தை நிலைநாட்டி முடிக்கவேண்டும்.
31. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பு கற்றுத் தருபவரையும் ......... என அழைப்பர்.
32. படப்பிடிப்புக் கருவியை ............... பொருத்துவதும் உண்டு.
33. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ............ இருக்கும்
34. இலெமூரியாவை ..................என்பர்.
35. துனக்குவமையில்லா ஒரு ............... தமிழ் இனம்.
36. அனைத்தையும் இழக்கினும் உண்மையை இழக்கிலேன் என்று கூறியவர் .............
37. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் .....................
38. இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் ...............
39. இராமலிங்கர் தமிழ் மொழியே ............ தரும் என்று கருதினார்.
40. சங்க காலத்தில் பெண்கள் ............... கடந்து செல்லக்கூடாது.
41. நாள்தோறும் கல்வியில் .................. உண்டாகிக் கொண்டிருக்கின்றன.

www.waytosuccess.org

42. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் .........தேர்வும் உண்டு.

## விடைகள்

1.திருவாதவூர் 2.எட்டாம் 3.திருப்பெருந்துறையில் 4.அரிவர்த்தன பாண்டிய 5.ஆங்கில 6.ஒருவாசகத்திற்கும் 7.133,1330 8.ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் 9.மேன்மை 10.எய்தாப்பழி 11.மணிமேகலையும் 12.சீவக சிந்தாமணி, குண்டலகேசி 13.பன்னிரண்டு அடி 14.நெற்கதிர் 15.அதிவீரராம பாண்டியன் 16.ஒட்டக்கூத்தர் 17.திறனறிந்து 18.திலகவதியார் 19.தேவாரம் 20.உமறுப்புலவர் 21.சீதக்காதி 22.குடி 23.திருவாய் மொழி 24.அகம்,புறம் 25.தமிழ் மொழி 26.அக்டோபர் 27.மாக்சு முல்லர் 28.பெரு நோய் 29.முரண்களை, முட்டறுத்தவர் 30.மேடைப் 31.சுருக்கத்தைக் 32.இயக்குனர் 33.நகர்த்தும் வண்டியில் 34.வேடிக்கையாக 35.மனித நாகரிகத் தொட்டில் 36.தனி இனம் 37.அரிச்சந்திரன் 38.தால்சுதாய் 39.வடலூர் 40.இறவாத நிலை 41.கடல் 42.புதுப் புதுத் துறைகள் 43.எழுத்துத்

## பகுதி-3

**பொருத்துக** (வினா எண்கள் 13-16 மதிப்பெண்கள்-4)

### இயல்-1 வாழ்த்து

| அ) சொல் | | பொருள் |
|---|---|---|
| 1. விரை | - | மணம் |
| 2. கழல் | - | அணிகலன் |
| 3. ததும்பி | - | பெருகி |
| 4. மெய் | - | உடல் |

| ஆ) பால் | | அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. அறத்துப்பால் | - | 38 அதிகாரங்கள் |
| 2. பொருட்பால் | - | 70 அதிகாரங்கள் |
| 3. இன்பத்துப்பால் | - | 25 அதிகாரங்கள் |

### இயல்-2 சிலப்பதிகாரம்

| இ) காண்டம் | | காதைகள் |
|---|---|---|
| 1. புகார்க் காண்டம் | - | 10 காதைகள் |
| 2 மதுரைக் காண்டம | - | 13 காதைகள |
| 3 வஞ்சிக் காண்டம் | - | 07 காதைகள் |

### கம்பராமாயணம இயல்-3

| ஈ) சொல் | - | பொருள் |
|---|---|---|
| 1. இடர் | - | துன்பம் |
| 2. நாவாய் | - | படகு |
| 3. இறை | - | தலைவன் |
| 4. இந்து | - | நிலவு |

### இயல்-4 பெரியபுராணம்

| உ) சொல் | - | பொருள் |
|---|---|---|
| 1. செறு | - | வயல் |
| 2. வித்து | - | விதை |
| 3. யாணர் | - | புதுவருவாய் |
| 4. வட்டி | - | பனையோலைப் பெட்டி |

### இயல்-8 சீறாப்புராணம்

| ஊ) சொல் | - | பொருள் |
|---|---|---|
| 1. கான் | - | காடு |
| 2. உழுவை | - | புலி |
| 3. மடங்கல் | - | சிங்கம் |
| 4. எண்கு | - | கரடி |

### இயல்-9 கலித் தொகை

| உ) சொல் | - | பொருள் |
|---|---|---|
| 1. பண்பு | - | பாடறிந்து ஒழுகுதல் |
| 2. அன்பு | - | தன்கிளை செறாஅமை |
| 3. அறிவு | - | பேதையர் சொல் நோன்றல் |
| 4. செறிவு | - | கூறியது மறாஅமை |

### இயல்-5 பெரிய புராணம்

| எ) சொல் | - | பொருள் |
|---|---|---|
| 1. மேதி | - | எருமை |
| 2. சந்தம் | - | அழகு |
| 3. கோதில | - | குற்றமில்லாத |
| 4. அங்கணர் | - | சிவன் |

### இயல்-8 காந்தியம்

| ஐ) நூல் | - | சார்பு |
|---|---|---|
| 1. சத்திய சோதனை | – | காந்தியடிகள் |
| 2. பகவத்கீதை | - | இந்து சமய நூல் |
| 3. திருக்குறள் | - | திருவள்ளுவர் |
| 4. பைபிள் | - | கிறித்துவ சமய நூல் |

### இயல்-9 கலித் தொகை

| ஏ) நூல் | - | ஆசிரியர் |
|---|---|---|
| 1. தேவாரம் | - | திருநாவுக்கரசர் |
| 2. சீறாப்புராணம் | - | உமறுப்புலவர் |
| 3. கலித்தொகை | - | நல்லந்துவனார் |
| 4. பூத்தது மானுடம் | - | சாலை இளந்திரையன் |

### இயல்-10 பல்துறை வேலைவாய்ப்புகள்

| ஒ) கூற்று | - | கூறியவர் |
|---|---|---|
| 1. வினையே ஆடவர்க்குயிர் | - | குறுந்தொகை |
| 2. முந்நீர் வழக்கம் மகடூவோர்க்கில்லை | – | தொல்காப்பியர் |
| 3. உடம்பை வளர்த்தேன்: உயிர் வளர்த்தேனே | – | திருமூலர் |
| 4. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் | - | நாமக்கல் கவிஞர் |

www.waytosuccess.org

# தமிழ் இரண்டாம் தாள்

## மெல்லக் கற்போர்க்கு கீழ்க்கண்ட வினா அமைப்பு முறையிலே பயிற்சி அளிக்க வேண்டும்

| வ. எண் | தலைப்பு | வினா எண் | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | வங்கி படிவம் | 38 | 5 |
| 2 | பொது கட்டுரை | 41 | 10 |
| 3 | அ) கதை (அல்லது)<br>ஆ) கவிதை | 36 | 5 |
| 4 | ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க / அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக | 34 | 5 |
| 5 | வாழ்வியல் சூழல் | 39 | 5 |
| 6 | கடிதம் / விண்ணப்பம் | 40 | 10 |
| 7 | தமிழாக்கம் / பழமொழி | 35 | 5 |
| 8 | பா நயம் பாராட்டுக | 37 | 5 |
| 9 | அணி | 28 முதல் 29 வரை | 5 |
| 10 | துணைப்பாடம் | 31 முதல் 33 வரை | 10 |
| 11 | அலகிட்டு வாய்ப்பாடு | 30 | 5 |
| 12 | வினாக்கள் | 21 முதல் 27 வரை | 10 |
| 13 | ஒரு மதிப்பெண் வினா | 1 முதல் 20 வரை | 20 |

www.waytosuccess.org

**வினா எண் - 38** **வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம்**

………….. கிளை நாள்………………

இடம்……………..

சேமிப்புக் கணக்கு எண்…………..

நிலையான கணக்கெண்…………..

பெயர்………………………..

ரூபாய்………………………..

ரூ.

| காசோலை எண்/ நாள் | பெறப்பட்ட வங்கி/ கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| | | |

காசோலை விவரம்:

தொகை:

………….. கிளை நாள்………………

இடம்……………..

சேமிப்புக் கணக்கு எண்

நிலையான கணக்கெண் (PAN)

ரூ.

பெயர்………………………..

ரூபாய்………………………..

காசோலை விவரம்

| காசோலை எண்/ நாள் | பெறப்பட்ட வங்கி/ கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| | | |

பண விவரம்

| தாள் | தொகை |
|---|---|
| 1000* | |
| 500* | |
| 100* | |
| 50* | |
| 20* | |
| 10* | |
| 5* | |
| காசுகள் | |
| மொத்தம் | |

செலுத்துநர் கையொப்பம்

www.waytosuccess.org

**வினா எண் - 38.**

**வங்கிக் கணக்கில் பணம் எடுக்கும் படிவம்**

சேமிப்பு வங்கிக் கணக்கு எண்............

சேமிப்பு கணக்கு நாள் :..................20

.......................... வங்கி..................... எனக்கு அல்லது இதனைக் கொணர்பவருக்கு

ருபாய்........................................................................ வழங்குக.

ரூ.

கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம்

**தொடர்வண்டி இருக்கை முன்பதிவுப் படிவம் நிரப்புதல்:**

முன்பதிவு/ரத்து செய்யும் விண்ணப்ப படிவம்

வண்டி எண்/பெயர்..................... பயண தேதி........................

வகுப்பு...............படுக்கை/உட்காரும் எண்ணிக்கை.....................

புறப்படும் இடம்...............சேரும் இடம்.................................

ஏறும் இடம்.................................

| **வ.எண்** | **பெயர்** | **பால் ஆ/பெ** | **வயது** | **பயணச்சலுகை உரிமை எண்** | **விருப்பம்** |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**தொடர் பயணம்/திரும்பும் பயண விவரங்கள்**

வண்டி எண்/பெயர்..................... பயண தேதி........................

வகுப்பு...............புறப்படும் இடம்...............சேரும் இடம்....................

விண்ணப்பதாரர் பெயர்.....................................................

விலாசம்..............................................................

..........................................................................

தொலைப்பேசி எண்.................. ..............................

கையொப்பம்

www.waytosuccess.org

**பொதுக்கட்டுரை – வினா எண் - 41**

## 1. சிக்கனமும் சிறுசேமிப்பும்

**முன்னுரை :**

**“சிக்கனமே சீரான வாழ்வு“** – என்பது பழ மொழி. **“பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை”** என்றார் வள்ளுவர். அப்பொருளின் சிறப்பை உணர்ந்து சேமிப்பது அவசியம். சிக்கனம் இருந்தால் தான் சேமிக்க முடியும்.

**சிக்கனம்:**

**“சிக்கனம் தேவை இக்கனம்”** தேவைக்கும் செலவு செய்யாமல் இருப்பது கருமித்தனம். தேவைக்கு மேல் செலவு செய்வது ஆடம்பரம். தேவைக்கு மட்டுமே செலவு செய்வது சிக்கனம்.

**சேமிப்பின் அவசியம்**

எறும்பு , தேனீக்கள் கூட தனது எதிர்கால தேவையை உணர்ந்து சேமிக்கின்றன. நமது வருவாயில் ஒரு சிறு தொகையையாவது சேமிக்க வேண்டும். இதனால் நமது எதிர்காலம் வளம் பெறும்.

**சேமிப்பின் கவனம்:**

அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு பாதுகாப்பற்ற நிறுவனங்களில் சேமிக்கக்கூடாது. நமது சேமிப்பைப் பாதுகாப்பாக அரசுடைமை வங்கிகள், அஞ்சலகங்களில் சேமிக்க வேண்டும்.

**முடிவுரை :**

நமது எதிர்கால , ஒளிமயமான வாழ்விற்கு சேமிப்பு அவசியம். **“சிறு துளி பெரு வெள்ளம்”** என்பது போல் சிறுகசிறுகச் சேமித்து வளம் பெருக வாழ்வோம்.

**“ சிக்கனம் வீட்டைக் காக்கும், சேமிப்பு நாட்டைக் காக்கும்”**

## 2. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

**முன்னுரை :**

நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கைச் சூழ்நிலையை மாசுபடாமல் பாதுகாப்பதே சுற்றுச்சூழல் பாதுகாப்பாகும். நம்மை காக்கும் பூமியை நாமும் காக்க வேண்டும்.

**நிலத்துாய்மை :**

இரசாயன உரம் , பூச்சிக்கொல்லி , நெகிழி பயன்பாட்டால் நிலம் மாசடைகிறது. இயற்கை உரம் பயன்படுத்தி , உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வது நமக்கும் , நிலத்திற்கும் பயனளிக்கும்.

**நீர்த்துாய்மை:**

**“நீரின்றி அமையாது உலகு”** என்றார் வள்ளுவர். நோய்கள் பெருக மாசுபட்ட நீரே காரணம், கழிவு நீர் , இரசாயனக் கழிவு நீர் நீர் நிலைகளில் கலப்பதால் நீர் மாசடைகிறது. கழிவுநீரை மறுசுழற்சி செய்ய வேண்டும்.

**முடிவுரை:** சுற்றுச்சூழலை பாதுகாத்து இயற்கை வளங்களை பேணிக்காப்போம்.

**அ) வினா எண் - 36** **கொடுக்கப்பட்ட கதைப் பகுதியை நிறைவு செய்க**

**(அல்லது)**

www.waytosuccess.org

**ஆ) கவிதை வினா எண்**

**மழை**

மழையே மழையே வான்மழையே
வானின் அமுதே வான்மழையே
வானம் பார்த்த பூமியின்
தாகம் தீர்க்க வா மழையே
பயிருக்கு உயிராய் வா மழையே
பருவம் தவறாது வா மழையே
அளவாய்ப் பொழிவாய் வான்மழையே
வளம்தரப் புவியில் வா மழையே

**நட்பு**

அன்பின் சிகரம் நட்பு
இன்ப ஊற்றாம் நட்பு
துன்பம் களைவது நட்பு
துயரினில் ஆறுதல் நட்பு
வளர்ச்சியில் துணைவரும் நட்பு
தளர்ச்சியில் தோள்தரும் நட்பு
உயிருக்கு உயிரானது நட்பு
உனக்காய் உயிர் தரும் நட்பு

**குழந்தை**

பொக்கைச் சிரிப்பினில் பூக்கள் மலரும்
குழறும் மொழியில் குழலும் தோற்கும்
அளைந்த கூழோ அமிழ்தினும் இனிக்கும்
தளர்ந்த நடையில் தங்கரதம் தோன்றும்
குன்றெனச் செல்வம் கொட்டி வைத்தாலும்
குழந்தைச் செல்வமே உயர்ந்து நிற்கும்
மண்ணில் மானுடம் நிலைப்பதும் தரணியில்
தலைமுறை தழைப்பதும் தத்தம் குழந்தையாலே

**வினா எண். 34(அ)**

**ஆங்கிலச் சொற்களை தமிழாக்கம் செய்க**

1. "டாடி வர்ற சன்டே எனக்கு பர்த்டே. பட் நீங்க எனக்கு பர்த் டே ட்ரெஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச் சொல்லி கால் பண்ணியிருக்கேன்."

   விடை: **"அப்பா வர்ற வர்ற ஞாயிற்றுக் கிழமை எனக்கு பிறந்த நாள். ஆனால் நீங்க எனக்கு பிறந்த நாள் ஆடை எடுக்கவில்லையே, ஏன் அப்பா? என்னோட நண்பர்களையெல்லாம் வீட்டுக்கு வரச் சொல்லி அலைபேசியில் அழைத்திருக்கிறேன்."**

2. சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே?
   வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா. அதனாலதான் லேட். சரி சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கட் கிடைச்சதா?
   பஸ் டென் தர்ட்டிக்கு வரும். லாஸ்ட் வீக்கே ரிஸர்வ் செய்தாச்சு.
   விடை: **சுரேஷ் என்ன ஆயிற்று? ஏன் தாமதமாய் வர்றே?**

www.waytosuccess.org

**வழியிலே ஒரே போக்குவரத்து நெரிசல்டா. அதனாலதான் தாமதம். சரி சரி பேருந்து எத்தனை மணிக்கு வரும்? பயணச் சீட்டு கிடைச்சதா? பேருந்து பத்து முப்பதுக்கு வரும். சென்ற வாரமே முன்பதிவு செய்தாச்சு.**

3. **ஷேத்திரங்கள்** தோறும் சென்று **விக்கிரகங்களை** வழிபடுக.
**கோவில்கள்** தோறும் சென்று **தெய்வத்திருவுருவங்களை** வழிபடுக.
**இம்மார்க்கத்தில்** யாத்திரை செல்லுங்கள்
**இவ்வழியில்** பயணம் செல்லுங்கள்

. இந்த **ஷர்ட்** மிகவும் **காஸ்ட்லியானது.**
இந்த **சட்டை அதிக விலையுடையது.**
நாளை நடக்கவிருக்கும் **மேட்சில்** இந்தியா கண்டிப்பாக **வின்** செய்யும்.
நாளை நடக்கவிருக்கும் **போட்டியில்** இந்தியா கண்டிப்பாக **வெற்றி** பெறும்.
நான் இந்த **காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்.**
நான் இந்த **கல்லூரியின் முன்னாள் மாணவர்.**

**34(ஆ)தமிழ் எண்ணுரு அரபு எண்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | க | – | கடலை |
| 2. | உ | – | உருண்டை |
| 3. | ங | – | இங்கு |
| 4. | ச | – | ரசித்து |
| 5. | ரு | – | ருசித்து |
| 6. | சா | – | சாப்பிடலாம் |
| 7. | எ | – | என்று |
| 8. | அ | – | அவள் |
| 9. | கூ | – | கூறினாள் |
| 10. | க0 | – | |

**வினா எண் - 39**

**வாழ்க்கைத் திறன்கள்**

**இயல் - 1**

1. யாழினியின் செயல் சரியானது தானா? - **தவறு**
2. நீங்கள் யாழினியாக இருந்தால் என்ன செய்வீர்கள்? சிந்தனை செய்க.
**நான் உறுதியாக கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்வேன். என் திறமை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.**

3.இச்சூழலிலிருந்து நீங்கள் பெறும் பண்பு யாது? – **எதையும் மனஉறுதியுடன் ஏற்றுக்கொள்ளும் பண்பு**

**இயல் - 2**

1. பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா? - **ஆம். சரி.**
2. நாம் எப்படிப் பட்டவர்களோடு நட்பு கொள்ள வேண்டும்? - **நல்ல ஒழுக்கம் உடையவரோடு.**
3. உடல் நலத்திற்குத் தீங்கு வி ளைவிக்கும் புகைப்பிடித்தல் முதலான செயல்களில் ஈடுபட உங்கள் நண்பர்கள் உங்களை அழைக்கிறார்கள். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?
**எனக்கு இது போன்ற செயல்களில் ஈடுபட விருப்பமில்லை , என்று கூறிவிடுவேன்.**

**இயல் - 3**

1. மாற்றுத்திறனாளரிடம் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள்?
**மாற்றுத்திறனாளரிடம் நான் பணிவாக நடந்து கொள்வேன். அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வேன்.**

**இயல் - 4**

1. இந்நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள்?
**பெண்களின் திருமண வயது 21. ஆதலால் எனக்கு இப்போது திருமணம் வேண்டாம் எனக்கூறுவாள்.**

www.waytosuccess.org

2. உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள்?
**திருமணத்திற்கு இது உரிய வயது அன்று என்று கூறி புரிய வைப்பேன்.**

**இயல் - 5**

1. இந்நிலையில் கதிரவன் தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான்?
**இன்று இல்லாவிட்டால் இன்னொரு நாள் பெற்றோர் அனுமதியுடன் செல்லலாம். ஆகவே இன்று நண்பர்களுடன் செல்ல வேண்டாம் என தன் மனவெழுச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்வான்.**
2. கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?
**எனக்கு உடல் நிலை சரியில்லை என்று கூறி மென்மையாக மறுத்து விடுவேன்.**

**இயல் - 6**

1. மதியழகன் தன் பெற்றோரை எவ்வாறு சம்மதிக்க வைப்பான்?
**திரைப்படத்துறையானது தொழிநுட்பம் , பொருளியல் போன்ற பொருளாதார வளர்ச்சியுடையது, என்று கூறி புரிய வைப்பான்.**

**இயல் - 7**

1. பாண்டியன், தன் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பான்?
**தன் தந்தையின் நண்பரிடம் இதைப்பற்றி எடுத்துக்கூறச்சொல்லி தந்தை உணருமாறு செய்வான்.**
2. நீங்கள் பாண்டியனாக இருந்தால் என்ன செய்வீர்கள்?
**நீங்கள் செய்வது பிடிக்க வில்லை என்று நேரடியாக அவரிடம் கூறிவிடுவான்.**

**இயல் -8**

1. இலக்கியா தனக்கேற்பட்ட மன அழுத்தத்தை எவ்வாறு எதிர்கொள்வாள்?
**அவள் மிகுந்த மன அழுத்தம் உடையவளாக இருந்தாலும் தன் தாயை பார்த்துக் கொண்டே தேர்வுக்கு படிப்பாள்.**

**இயல் - 9**

1. அந்தச்சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள்?
**நாளை எனக்கு தேர்வு உள்ளது. நான் படிக்க வேண்டும். என்ன செய்தியாக இருந்தாலும் அப்பா வந்தவுடன் பேசிக் கொள்ளுங்கள் என்பாள்.**
2. நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?
**அப்பாவிடம் செல்பேசியில் தொடர்பு கொண்டு பேசுங்கள் என்று கூறிவிடுவேன்.**

**இயல் - 10**

1. இவர்களில் யாரைப்போல் இருப்பது நல்லது? - **தமிழரசன்**
2. தன்னிடம் அனைவரும் நெருங்கி பழகுவதற்கு எழிலன் என்ன செய்ய வேண்டும்?
**அனைவரிடமும் தானாக சென்று பழக வேண்டும்.**
3. உங்களுக்கு நண்பர்கள் உண்டா? எத்தனை பேர்? –
**உண்டு. அனைவரும் என் நண்பர்களே.**

**வினா எண். 40**

**கடிதம்**

**1. நண்பர், பெற்றோர் , உறவினர் இவர்களுக்கு கடிதம் எழுதும் முறை**

**கடிதத்தின் தலைப்பு**

இடம் :
நாள்:

அன்புள்ள –

1. நலம் விசாரித்தல்
2. கடிதம் எழுதப்படும் காரணத்திற்கான விளக்கம்அதன் பின்னர் வேண்டுதல் அல்லது விருப்பம்.

தங்கள் அன்புள்ள,

www.waytosuccess.org

உறையின் மேல் முகவரி
நண்பர்/ பெற்றோர் / உறவினர் பெயர். வீட்டு
எண் , தெரு பெயர்
ஊர்.

## 3. அலுவலகக் கடிதம்

**புகார் கடிதம் , வேண்டுகோள் விண்ணப்பம் எழுதும் முறை.**

**கடிதத்தின் தலைப்பு**

அனுப்புதல்
xxxxxxx
xxxxxxx
ஊர்.

பெறுதல்
xxxxxx
அலுவலகத்தின் பெயர்,
ஊர்.

ஐயா/ அம்மையீர்

பொருள் : கடிதம் எழுதப்படும் காரணத்தை எழுத வேண்டும்.

1. கடிதம் எழுதப்படும் நோக்கம்.
2. அக்குறைகளால் மக்களுக்கு ஏற்படும் துன்பம்.
3. குறைபாடு நீக்கப்பட்டால் மக்களுக்கு ஏற்படும் நன்மை.
4. குறைகளைப் போக்குமாறு வேண்டுகோள் விடுத்தல்.

இடம் :
நாள் :

தங்கள் உண்மையுள்ள

உறையின் மேல் முகவரி
பெறுதல் முகவரியைத் திரும்ப எழுதுதல் வேண்டும்.

## வினா எண்.35 பழமொழி

| | |
|---|---|
| 1. Health is wealth | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் |
| 2.No pain no gain | உழைப்பின்றி ஊதியம் இல்லை. |
| 3. Haste make waste | பதறாத காரியம் சிதறாது |
| 4.Knowledge is power | அறிவே ஆற்றல் |
| 5. Charity begins at home | தனக்குப் போகத் தானம் |
| 6. Covet all lose all | பேராசை பெரு நஷ்டம் |
| 7. Diamonds cut diamonds | முள்ளை முள்ளால் எடு |
| 8. Barking dog seldom bite | குரைக்கின்ற நாய் கடிக்காது |
| 9. Money make many things | பணம் பத்தும் செய்யும் |
| 10. Blood is thicker than water | தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் |

www.waytosuccess.org

| | |
|---|---|
| 11. East or west, home is the best | எலி வளையானாலும் தனி வளை வேண்டும் |
| 12. Empty vessels make the greatest sound | குறை குடம் கூத்தாடும் |
| 13. Prevention is better than cure | வருமுன் காப்பதே சிறந்தது |
| 14. Tit for tat | பழிக்குப் பழி |
| 15. Work is worship | செய்யும் தொழிலே தெய்வம் |
| 16. Time is gold | காலம் பொன் போன்றது. |
| 17. Look before you leap | ஆழம் தெரியாமல் காலை விடாதே. |
| 18. All that glitter is not gold | மின்னுவதெல்லாம் பொன்னல்ல. |
| 19. Strike the rod while it is hot | காற்றுள்ள போதே தூற்றிக் கொள் |
| 20. Make hay while the sun shine | காற்றுள்ள போதே தூற்றிக் கொள் |
| 21. Too much anything good for nothing | அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு |
| 22. A friend in need is a friend indeed | ஆபத்தில் உதவுபவனே அருமை நண்பன் |
| 23. Union is strength | ஒற்றுமையே வலிமை |
| 24. Man proposes; god disposes | **நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்** |
| 25. Birds are the same feather flock together | இனம் இனத்தோடு சேரும் |
| 26. Live and let live. | வாழ்: வாழ விடு |
| 27. Manners make the man | நன்னடத்தையே மனிதனை உருவாக்கும் |
| 28. All is well and ends well | நல்ல தொடக்கம் நல்ல முடிவு |
| 29. Little strokes fell great oaks | அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் |
| 30. Do well what you have to do | செய்வன திருந்தச் செய் |
| 31. Small rudders guide great ships | சிறு துரும்பும் பல் குத்த உதவும் |
| 32. You must walk before run | அறையில் ஆடிவிட்டு அம்பலத்தில்ஆடு |
| 33.Measure is a treasure | அளவோடு வாழ்ந்தால் வளமோடு வாழலாம் |
| 34. Misfortune never comes singly | பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும் |
| 35. Familiarity breeds contempt | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு,<br>நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு |
| 36. Art is long but life is shot | கல்வி கரையிலே , கற்பவர் நாள் சில |
| 37. Eagles don't catch flies | புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது |
| 38. First deserve then desire | முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா? |
| 39. Every cock will crow upon his own dunghill | வீட்டில் எலி வெளியில் புலி |
| 40. Failure is the stepping stone to success | தோல்வியே வெற்றிக்கு அடிப்படை |
| 41. Even a pin is good for something | சிறு துரும்பும் பல் குத்த உதவும் |
| 42. Take time by the forelock | காலத்தே கடமையைச் செய் |
| 43. Every tide has its ebb | ஏற்றம் உண்டானால் இறக்கம் உண்டு |
| 44. Distance lends enchantment to the view | இக்கரைக்கு அக்கரை பச்சை |
| 45.The mills of god grind slow but sure | அரசன்அன்றுகொள்வான் தெய்வம் நின்று கொள்ளும் |
| 46.The face is the index of the mind | அகத்தின் அழகு முகத்தில் தெரியும் |
| **47.**Hearty laugh dispels disease | வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டுப் போகும் |
| **48.**Take time by the forelock | காலத்தே கடமையைச் செய் |
| **49.**Self help is the best help | தன் கையே தனக்குதவி |

www.waytosuccess.org

50.A law maker should not be a law breaker வேலியே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி?

**வினா எண்- 35(அ) மொழி பெயர்ப்பு**

1. Maps serve better than the printed pages for giving many kinds of information. In fact, people made and used maps before they learned how to read and write. Explorers have found maps that had been mad by their ancestors. Sometimes these maps were carved on stones.

   நிலப்படங்கள் அச்சடிக்கப்பட்ட பக்கங்களை விட பல்வேறு வகையான தகவல்களைத் தருகின்றன. உண்மையிலேயே எழுதப்படிக்க அறிந்து கொள்வதற்கு முன்னரே மக்கள் நிலப்படங்களைத் தயாரித்துப் பயன்படுத்தினர். நிலவியல் கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் முன்னோர்களால் தயாரிக்கப்பட்ட நிலப்படங்களைக் கண்டுபிடித்தனர். இத்தகைய நிலப்படங்கள் சில நேரங்களில் கற்களின் மேல் செதுத்தப்பட்டிருந்தன.

2. Trees are very useful to us. They give us timber and fire wood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

   மரங்கள் நமக்கு மிகவும் பயனுள்ளவை. அவை நமக்கு மரத்தடிகளையும் விறகையும் தருகின்றன. மரத்தடிகள் நாற்காலி, மேசை மற்றும் மரச்சாமான்கள் செய்வதற்குப் பயன்படுகின்றன. சில மரங்களின் எண்ணெய் வித்துக்களிலிருந்து நாம் எண்ணெயைப் பெறுகிறோம். சில மரங்களின் இலைகளும் கனிகளும் மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகின்றன.

3. Early to bed and early to rise make a man healthy, wealthy, and wise. The early riser has more time and energy to prepare for the day's work than the late riser. Besides, he finds himself fresh and brisk. Early morning is the most suitable time for study. As the mind is fresh, even a difficult study is made easy.

   இரவில் முன்னதாகத் தூங்கி அதிகாலையில் எழுவது ஒரு மனிதனை நலமுடனும் வளமுடனும் அறிவாற்றலுடனும் வைக்கிறது. அதிகாலையில் எழுபவருக்கு தாமதமாக எழுபவரைவிட அன்றைய வேலைகளைச் செய்வதற்கு அதிக நேரமும் அதிக ஆற்றலும் கிடைக்கிறது. மேலும் அவன் தனக்குள் சுறுசுறுப்பையும் காண்கிறான். அதிகாலை நேரம் படிப்பதற்கு மிகவும் பொருத்தமான நேரம். அதிகாலையில் மூளை புத்துணர்வுடன் இருப்பதால் கடினமான பாடங்கள் கூட எளிதாகிறது.

4. Letter writing is an art. This can be perfected through constant practice. We write letters to keep in touch with friends and relatives and to very important information. Letters are a form of conversation; because they involve personal and direct communications between two people. So, every educated person should know how to write a clear and readable letter.

   கடிதம் வரைவது ஒரு கலை. இது தொடர் பயிற்சியினால் நேர்த்தியாகும். நண்பர்களுடனும் உறவினர்களுடனும் உள்ள தொடர்பினைத் தொடரவும் முக்கியமான தகவல்களைத் தாங்கிச் செல்லவும் நாம் கடிதங்களை எழுதுகிறோம். கடிதங்கள் உரையாடல் வடிவானதாகும். ஏனெனில், அவை இரண்டு நபர்களுக்கிடையே தனிப்பட்ட மற்றும் நேரடித் தொடர்பினை ஏற்படுத்துகிறது. எனவே கற்றோர் யாவரும் எளிதில் படித்துப் புரிந்துகொள்ளக்கூடிய கடிதத்தை எப்படி எழுத வேண்டுமென அறிந்திருக்க வேண்டும்.

5. The television is one of the wonders of modern India. , agriculture and family. Many useful programs on education, health agriculture and family planning are specially prepared for rural viewers. Interesting dramas and films are shown at regular intervals. The television is also used for commercial advertisements.

   தொலைக்காட்சி நவீன இந்தியாவின் அற்புதங்களுள் ஒன்றாகும். கிராமப்புறப் பார்வையாளர்களுக்கென கல்வி, சுகாதாரம், வேளாண்மை மற்றும் குடும்ப நலத்திட்டங்கள் குறித்த நிகழ்ச்சிகள் சிறப்பாகத் தயாரிக்கப்படுகின்றன. ஆர்வமூட்டும் நாடகங்களும் திரைப்படங்களும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் காட்டப்படுகின்றன. தொலைக்காட்சி வணிக விளம்பரங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

www.waytosuccess.org

6. Food is essential for all living beings. Without food man cannot live long. Everyman has to eat a certain quantity of food. If he eats less than that quantity his health will fail and will fall ill. So, every man has to eat enough food to live.

   உயிருள்ளவை அனைத்திற்கும் உணவு இன்றியமையாததாகும். உணவின்றி மனிதன் நீண்டநாள் உயிர் வாழ முடியாது.ஒவ்வொரு மனிதனும் உயிர்வாழப் போதுடான உணவினை உண்ண வேண்டும். அவன் அந்த அளவை விடக் குறைவான உணவினை உண்டால் உடல்நலம் குன்றி நோயில் வீழ்வான். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் உயிர்வாழப் போதுமான உணவினை உண்ண வேண்டும்.

7. This is the age of computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business, firm, industrials concerns and government departments, lot of information processing is required. The Computer is the superfast information processing unit.

   தற்காலம் கணினியுகம் ஆகும்.கணினிகள் மென்மேலும் வாழ்வின் ஒரு பகுதியாக உருவாகி வலுகின்றன. இன்று வாணிகம், நிறுவனம், தொழிற்சாலைகள் தொடர்பாகவும் மற்றும் அரசுத் துறைகளிலும் செயல்பாடுகளிலும் அளவற்ற தகவல் பராமரிப்பு தேவைப்படுகிறது. தகவல் பரிமாற்றங்களில் கணினி அதிவிரைவாக செயல்படுகிறது.

8. Gandhiji loved and respected truth more than anything else. He fought his whole life to upload the value of truth. From his experiment with truth he camo to know there coulg be a God other than truth. He taught us that our thought, word and deed should be one. He preached what he practiced.

   காந்தியடிகள் மற்றெல்லாவற்றையும்விட உண்மையை நேசித்து மதித்தார்.அவர் தன் வாழநாள் முழுவதும் உண்மையின் மதிப்பீடுகளை கடைபிடிக்க போராடினார். அவர் உண்மைகளை ஆய்ந்து பரர்த்ததில் உண்மையைத் தவிர வேறு கடவுள் இல்லை என்று கண்டறிந்தார். நமது எண்ணம், சொல் செயல் யாவும் ஒன்றாகவே இருக்க வேண்டுமென கற்பித்தார். அவர் எதைக் கடைபிடித்தரரோ அதையே போதித்தார்.

9. Schools do not stop with teaching the children the lessons alone. They do more. It is in the schools that the boys and girls from some regular habits. They learn to behave in an orderly way. They are corrected whenever they go wrong.

   பள்ளிகள் குழந்தைகளுக்கு பாடங்கள் கற்றுத் தருவதோடு மட்டும் நின்று விடுவதில்லை. அவை இன்னும் அதிகமான பணிகளை செய்கின்றன. பள்ளிகளில் சிறுவர், சிறுமியர் சில பழக்க வழக்கங்களை கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் முறையான வழியில் நடக்கக் கற்றுக்கொள்கின்றனர். அவர்கள் தவறான வழியில் செல்லும்போது திருத்தப்படுகின்றனர்.

10. Library is a place for reading. There will be a librarian in each library. He takes care of rach books in the library. It has story books in English and Tamil. It also has books of science, economics and commerce. There are newspapers and magazines in Tamil and English. We can read them silently. It is a place for silent reading. Books can be borrowed from to weeks from the library. It is useful for everyone.

    நூலகங்கள் புத்தகங்களை வாசிப்பதற்கான இடம். ஒவ்வொரு நூலகத்திலும் ஒரு நூலகர் இருப்பார். அவர் நூலகத்திலுள்ள அனைத்துப் புத்தகங்களையும் பாதுகாப்பார். நூலகத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் கதைப் புத்தகங்கள் உள்ளன. மேலும் அறிவியல், பொருளாதாரம், வணிகவியல் தொடர்பான நூல்களும் நூலகத்தில் உள்ளன. செய்தித் தாள்களும் பருவ இதழ்களும் தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ளன. ஆவற்றை அமைதியாக நாம் வாசிக்கலாம். நூலகம் அமைதியாக படிப்பதற்கு உரிய இடமாகும். நூலகத்திலிருந்து இரு வாரங்களுக்குப் புத்தகங்களை இரவலாகப் பெற்றுக் கொள்ளலாம். நூலகம் நம் ஒவ்வொருவருக்கும் நன்மை பயப்பதாகும்.

**வினா எண் - 37**

## பகுதி – 5

**கொடுக்கப்பட்ட பாடலின் மையக் கருத்தைக்கூறி ஏற்புடை நயங்களை எழுதுக.**

**மையக்கருத்து:**

www.waytosuccess.org

**" கருத்துடைய பாடல்**
**சுவையுடையதாக இருக்கும்"**

கொடுக்கப்பட்ட பாடலின் மையக்கருத்து பின்வருமாறு

**தொடை நயம் :**

**" தொடையற்றப் பாட்டு**
**நடையற்று போகும்"**

என்பது முன்னோர் வாக்கு கவிஞர் மேற்கண்ட பாடலில் எதுகை , மோனை , தொடை நயங்கள் அமைத்துப் பாடிருக்கும் திறன் போற்றுதற்குரியது.

**எதுகை நயம் :**

**"பாடலுக்கு எது கை கொடுக்காவிட்டாலும்**
**எதுகை கை கொடுக்கும்"**

பாடலின் அடி அல்லது சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரத்தொடுப்பது எதுகை எனப்படும். கவிஞர் மேற்கண்ட பாடலில் எதுகை, தொடை நயங்கள் அமைத்து செய்யுளை மிளிரச் செய்கிறார்.

**மோனை நயம் :**

**"குயவனின் கைவண்ணம் பானையிலே**
**புலவனின் கைவண்ணம் மோனையிலே"**

பாடலின் அடி அல்லது சீர்களில் முதல் எழுத்து ஒன்று போல் வரத்தொடுப்பது மோனை எனப்படும். கவிஞர் மேற்கண்ட பாடலில், மோனை, தொடை நயங்கள் அமைத்து பாடியுள்ள பாங்கு போற்றுதற்குரியது.

**கற்பனை நயம் :**

**" கற்பனையற்ற பாடல்**
**விற்பனையற்றுப் போகும் "**

இதனை நன்குணர்ந்த கவிஞர் இப்பாடலில் கீழ்க்கண்ட கற்பனையை அழகுபட அமைத்துள்ளார்.

**பாடலுக்கேற்றத் தலைப்பு:**

**"தலைப்பில்லாக்கவிதை**
**தாயில்லாப் பிள்ளை போல்"**

என்பர். இப்பாடலுக்கேற்றத் தலைப்பு..

**வினா எண். 28 மற்றும் 29**

## அணி

1. **தற்குறிப்பேற்ற அணி:**
   இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் கருத்தை ஏற்றிக் கூறுவது.
   சான்று: "போருழந் தெடுத்த........." எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.
2. **வஞ்சப் புகழ்ச்சி அணி:**
   புகழ்வது போலப் பழித்தலும் பழிப்பது போலப் புகழதலும் வஞ்சப் புகழ்ச்சி அணி.
   சான்று: தேவர் அனையர் எனத் தொடங்கும் திருக்குறள்
3. **சொற்பொருள் பின்வருநிலையணி:**
   செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது.
   சான்று: தீயவை தீய பயத்தலான் தீயவை
   தீயினும் அஞ்சப் படும்.

**வினா எண் 31 முதல் 33 வரை**

## துணைப் பாடக் கட்டுரைகள்

### பரிதிமாற் கலைஞர்

1. இயற்பெயர-சூரிய நாராயண சாஸ்திரி
2. தமிழார்வம் மிக்க இயற்றமிழ் மாணவர்களுக்கப் பாடம் எடுத்தார்.

www.waytosuccess.org

3. மணிப்பிரவாள நடையை எதிர்த்தார்.
4. ரூபாவதி, கலாவதி என்னும் நாடகங்களை எதிர்த்தார்.
5. முதன் முதலில் தமிழை உயர்தனிச் செம்மொழி என்ற அழைத்தார்.

**மெல்ல மெல்ல மற**

1. கமலநாதன் புகைப் பிடிக்கும் பழக்கம் உடையவன்.
2. அவனது மனைவி கோகிலா புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிடும்படி கூறினாள்.
3. கோகிலாவின் அறிவுரைகளை அவன் கேட்கவில்லை.
4. ஒருநாள் அவனது நண்பன் இறந்துவிடுகிறான்.
5. புகைப் பழக்கத்தினால் சுவாசப்பை புற்றுநோய் ஏற்பட்டு இறந்ததாகக் கூறுகின்றனர்.
6. நண்பனின் முடிவை எண்ணி கமலநாதன் மனம் திருந்துகிறான்.

**அன்றாட வாழ்வில் சட்டங்கள்**

**தகவல் அறியும் உரிமைச் சட்டம்**

1. நாம் செலுத்திய வரிப் பணம் எப்படி செலவாகிறது என்பதை அறிவது.
2. இதற்கு தனி விண்ணப்பம் இல்லை.
3. ஏழைகளுக்கு கட்டணம் இல்லை.

**குழந்தைத் தொழிலாளர் சட்டம்**

1. பெற்றோர் தம் குழந்தைகளை வேலைக்கு அனுப்புகின்றனர்.
2. படிக்கும் வயதில் மண் சுமக்கின்றனர்.
3. இந்நிலையை மாற்ற அரசால் கொண்டு வரப்பட்டதே குழந்தைத் தொழிலாளர் சட்டம்

**போக்கு வரத்து சட்டம்**

1. சிவப்பு விளக்கு எரிந்தால் வண்டியை நிறுத்த வேண்டும்.
2. மஞ்சள் விளக்கு எரிந்தால் தயாராக இருக்க வேண்டும்.
3. பச்சை விளக்கு எரிந்தால் புறப்படுதல் வேண்டும்.
4. மகிழுந்துகள் மற்றும் இருசக்கர வாகனங்கள செல்ல மஞ்சள நிற கோடு போடப்பட்டிருக்கும்
5.சாலை விதிகளை மீறுதல் குற்றமாகும்.

**குறட்டை ஒலி**

**தென்பகுதி குடும்பம்**

கணவன், மனைவி, 6 குழந்தைகள், 1 பாட்டி, 1 நாய் என்று பெரிய ஏழைக் குடும்பம்.

**வடபகுதி குடும்பம்**

கணவன், மனைவி என இருவர் மட்டுமெ வாழும் சிறிய குடும்பம்.

**நாய்குட்டிகள்**

நாய் 5 குட்டிகளை ஈன்றது. அடுத்த மூன்றாம் நாள் வெளியே சென்ற நாய் திரும்பவில்லை. நாய்குட்டிகள் பசியால் கத்தின.

**ஏழைத்தாயின் கருணை**

பசியால் கத்திய நாய்குட்டிகளுக்கு தன்னுடைய பாலையே பஞ்சில் நனைத்துத் தந்து பசி போக்கினாள்.

**வினா எண் - 30** **பிரிவு - 3**

**அலகிட்டு வாய்பாடு** **பகுதி – 1**

**குறள்**

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

| | |
|---|---|
| ஒழுக் / கம் | விழுப் / பம் |
| நிரை / நேர் - புளிமா | நிரை / நேர் - புளிமா |
| தர / லான் | ஒழுக் / கம் |
| நிரை / நேர் - புளிமா | நிரை / நேர் - புளிமா |
| உயி / ரினும் | ஓம் / பப் |
| நிரை / நிரை - கருவிளம் | நேர் / நேர் – தேமா |

படும் - நிரை – மலர்

www.waytosuccess.org

1. மூன்று எழுத்துகள் வந்தால் - **நிரை**
2. இரண்டு எழுத்துகள் வந்தால்
   (மெய் எழுத்து இல்லாமல்) ---- **இருகுறில் அல்லது குறில் நெடில்**
3. இரண்டு எழுத்துகள் வந்தால் ---- **(குறில் அல்லது நெடில் + மெய்) --- நேர்**

**வாய்பாடு**

**நேர் / நேர் – தேமா ; நிரை / நேர் - புளிமா ; நிரை / நிரை - கருவிளம்**

**நேர் / நிரை - கூவிளம்**

**வினா எண் 21 முதல் 27 வரைகுறுவினாக்கள்**

1. ஐகாரக் குறுக்கத்தை எடுத்துக் காட்டுடன் விளக்கு.
   “ஐகாரம்” தன் இரண்டு மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பது. (எ-டு) ஐம்பது, தலைவன்
2. ஔகாரக் குறுக்கத்தை எடுத்துக் காட்டுடன் விளக்கு.
   “ஔகாரம்” தன் இரண்டு மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பது. (எ-டு) ஔவை
3. மொழியின் வகைகள் யாவை?
   மொழி தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூன்று வகைப்படும்.
4. பொதுமொழி என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.
   ஒரு சொல் தனித்து ஒரு பொருளையும் பிரிந்து வேறு பொருளையும் தருவது.
5. முற்றெச்சம் என்றால் என்ன்?
   ஒரு வினைமுற்றுச் சொல் எச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது. (எ-டு) நந்தினி வந்தனள், போயினள்.
6. இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
   ஒரு சொல், தன் பொருளையும் குறித்து தனக்கு இனமான பொருளையும் குறிப்பது இனங்குறித்தல் எனப்படும். (உ-டு) கதிர்வேல் வெற்றிலை தின்றான்.
7. அடுக்குத் தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
   ஒரு சொல் இரண்டு, மூன’று, நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் ஆகும். (எ-டு) வாழ்கஸ்ரீ வாழ்கஸ்ரீ
8. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   வினா ஆறு வகைப்படும். அவை அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொடைவினா, கொளல்வினா, ஏவல்வினா.
9. ஐய வினாவை எடுத்துக் காட்டுடன் விளக்கு. - அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ?
10. வெளிப்படையாக பொருள் உணர்த்தும் விடை வகைகள் யாவை?
    சுட்டு, மறை, நேர் ஆகியன வெளிப்படையாக பொருள் உணர்த்தும்.
11. உற்றது உரைத்தல் விடையினை எடுத்துக் காட்டுடன் விளக்கு.
    “இது செய்வாயா?” என வினவியபோது “உடம்பு நொந்தது” எனக் கூறுவது உற்றது உரைத்தல் விடை.
12. உறுவது கூறல் விடையினை எடுத்துக் காட்டுடன் விளக்கு.
    “இது செய்வாயா?” என வினவியபோது “கை வலிக்கும்” எனக் கூறுவது உறுவது கூறல் விடை.
13. இனமொழி விடையினை எடுத்துக் காட்டுடன் விளக்கு.
    “ஆடுவாயா?”என வினவியபோது “பாடுவேன்” எனக் கூறுவது இனமொழி விடை.
14. ஒருபொருட்பன்மொழி என்றால் என்ன? எ.கா தருக.
    பொருருட் சிறப்புக்காக ஒரு பொருளை குறிக்க பல சொற்கள் வருவது. எ.கா.நடுமையம்
15. செம்மை+ மொழி எவ்வாறு புணரும்?
    1.செம்மை+ மொழி= செம்மொழி 2.’ஈறுபோதல்’ விதிப்படி மை கெட்டு செம்மொரி என்று புணர்ந்தது.
16. முதற்பொருள் என்பது யாது? - **நிலமும் பொருளும் முதற்பொருள் எனப்படும்.**
17. கருப்பொருள் எனபது யாது?
    தெய்வம், மக்கள், விலங்கு, உணவு முதலியன கருப்பொருள் ஆகும்.

www.waytosuccess.org

18. மதில்போர் பற்றிய புறத்திணைகள் யாவை? **1.நொச்சி 2.உழிஞை**
19. நால்வகைப் பாக்கள் யாவை?
    வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா என பாக்கள் நான்கு வகைப்படும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடு (வினா எண்கள் 1-5)**

1. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் ....................
2. பல்+ தீது என்பது ............................ எனப் புணரும்.
3. இளவழகன் வந்தான் இது .................................. தொடர்.
4. 'மாடு' என்னும் சொல் ............................... ஆகும்.
5. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது ................................. குறிக்கும்.
6. வடக்கு என்னும் திசைப் பெயரோடு பிற திசைகள் வந்து சேரும்போது .........
7. மேற்கு+ நாடு என்பது ............................ எனச் சேரும்.
8. கருமை+ குழி என்பது ...................... என்னும் விதிகளின்படி புணரும்.
9. அகத்திணைகள் ............................... வகைப்படும்.
10. மருத நிலத்திற்குரிய தெய்வம் ..........................................
11. முருகன் ............................ நிலத்திற்குரிய தெய்வம்.
12. பாலை நிலத்திற்குரிய பறவைகள் .................................
13. புறத்திணைகள் ............................... வகைப்படும்.
14. நிரைகவர்தல் என்பது .................................. திணை.
15. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது ......திணை.
16. பாடாண்திணை என்பது ............................ கூறுவது.
17. ஒருதலைக் காமம் என்பது .................................
18. தன் நாட்டைக் கைப்பற்றுவதற்கு வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது ...
19. 'உலகு' என்னும் சொல் வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச்சீர் எனில் அதன் வாய்ப்பாடு ......
20. நல்லவை- இச்சொல்லை அலகிட்டால் ......எனப்பிரியும்.
21. நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயலடி .............. வரும்.
22. ஆசிரப்பாவின் ஈற்றுச் சீர் ...................... முடிவது சிறப்பு.
23. மார்கழி, தை ஆகிய இரண்டும் .........காலத்திற்கு உரியவை.

**விடைகள்:**

**1.**திண்ணை **2.**<u>பஃறீது</u>**3.**வெளிப்படைத் **4.**<u>அஃறிணைப்</u> பொது **5.**பசுவை **6.**நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும் **7.**மேனாடு **8.**ஈறு போதல், இனமிகல் **9.**ஏழு **10.**இந்திரன் **11.**குறிஞ்சி **12.**புறா, பருந்து **13.**பன்னிரண்டு **14.**வெட்சி **15.**வஞ்சி **16.**ஆண்மகனின் ஒழுக்க வரலாறுகளை **17.**கைக்கிளை **18.**காஞ்சித்திணை **19.**பிறப்பு **20.**நேர், நிறை **21.**முச்சீராய் **22.**ஏகாரத்தில் **23.**முன்பனி

**சரியான விடையைத் தேர்ந்தெடு (வினா எண்கள் 6-10)**

1. வளையல்- இச்சொல்லின் அதிகாரம் .................... குறைந்து ஒலிக்கிறது.
2. முஃடீது இது......................... குறுக்கம்.
3. வௌவால் இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் யாது?
4. தலைவன் இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் யாது?
5. குறுக்கங்கள் ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், .........................., ஆயதக் குறுக்கம் என நான்கு வகைப்படும்.
6. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ..........................

www.waytosuccess.org

7. தொழிலைக் குறிக்கும் சொல் ..........................
8. வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, ......... என ஆறு வகைப்படும்.
9. ஓர் எச்ச வினை ............ கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் எனப்படும்.
10. பொதுமொழிக்கு எடுத்துக்காட்டு தருக.
11. ஒரு பொருள் குறித்து வரும் தொடர் சொற்களையே .................... என்பர்.
12. ஒருபொருட் பன்மொழிக்கு எடுத்துக்காட்டு ................................
13. வினா.......................... வகைப்படும்.
14. விடை.................... வகைப்படும்.
15. பாம்போ? கயிறோ? இது எவ்வகை வினா?
16. இது செய்வாயா? என்னும் வினாவிற்கு வயிறு வலிக்கும் எனக் கூறுவது ......
17. ஆடத் தெரியுமா? என்னும் வினாவிற்கு பாடத் தெரியும் என்று கூறுவது ......
18. "நன்னூல் கிடைக்குமா?"எனக் கடைக்காரரிடம் கேட்பது ......
19. இதன் பொருள் யாது? என ஆசிரியர் மாணவனிடம் கேட்பது ......
20. இதைச் செய்வாயா? ஏன்பதற்கு "நீயே செய்" என்பது ..........................
21. மான் .............. மருளும் பார்வை. உரிய உவமை உருபை இணைத்து எழுது.
22. உவமைகளை உருவகங்களாக மாற்று.
**1.மதிமுகம்- முகமதி ; 2.பவளவாய்- வாய்ப்பவளம்**
23. உருவகத்தை உவமையாக மாற்று.
**1.விழிகயல்- கயல்விழி 2.பல்முத்து- முத்துப்பல்**
**3.அமிழ்தமொழி- மொழியமிழ்து 4.மதிமுகம்- முகமதி**
24. தொகை உவமைகளை விரி உவமைகளாக மாற்று.
**1.மதிமுகம்- மதி போன்ற முகம் 2.பவளவாய்- பவளம் போன்ற வாய்**
25. விரிஉவமைகளை தொகை உவமைகளாக மாற்று.
**1.கயல் போன்ற விழி- கயல்விழி 2.கிளி போன்ற மொழி- கிளிமொழி**
26. **வேய்புரைதோள்-** இத்தொடரில் அமைந்துள்ள உவம உருபு..........................
27. மலரன்ன சேவடி- இத்தொடரில் அமைந்துள்ள உவம உருபு .........
28. வடகிழக்கு- இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி .........................
29. செம்மை+ மொழி என்பது ...................... எனப் புணரும்.
30. பொருள் இலக்கணம் ................, ...................., என இரு வகைப்படும்.
31. மரவேர் என்பது ............................... புணர்ச்சி ஆகும்.
32. வெண்பாவின் ஓசை .............................. ஆகும்.

**விடைகள்:**

1.ஒரு மாத்திரை 2.ஆய்தக் குறுக்கம் 3.ஔகாரக் குறுக்கம் 4.ஐகாரக் குறுக்கம் 5.மகரக்குறுக்கம் 6.தனிமொழி 7.வினைச்சொல் 8.குறிப்பு வினைமுற்று 9.பெயரைக் 10.அந்தமான் 11.ஒருபொருட் பன்மொழி 12.மீமிசை ஞாயிறு 13.ஆறு 14.எட்டு 15.ஐயவினா 16.உறுவது கூறல் 17.இனமொழி விடை 18.கொளல் வினா 19.அறிவினா 20.ஏவல் வினா 21.போன்ற 26.புரைய 27.அன்ன 28.திசைப்பெயர் புணர்ச்சி 29.செம்மொழி 30.அகம்,புறம் 31.மகர ஈற்றுப் 32.செப்பலோசை

**வினா எண் - 14**

**பகுதி-3**

2. **தொடரை மாற்றி அமைக்க:**

1. திருக்குறளை அனைவரும் அறிவர். **(வினாத் தொடராக அமைக்க)**
   திருக்குறளை அனைவரும் அறிவரோ?
2. இமயமலை மிகவும் உயரமாக உள்ளது. **(உணர்ச்சித் தொடராக மாற்றுக)**

www.waytosuccess.org

ஆ! என்னே! இமயமலையின் உயரம்!

3. கிளி கல்லால் அடிபட்டது. **(உணர்ச்சித் தொடராக மாற்றுக)**
ஐயோ! கிளி கல்லால் அடிபட்டதே!

4. வாரியார், " குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்கவேண்டும்" என்றார். **(அயற்கூற்றாக மாற்றுக)**
வாரியார் குழந்தையிடம் ஒவ்வொரு நாளும் திருவாசகம் படிக்குமாறு கூறினார்.

5. நேற்று மாலை புயல் வீசியது் மரங்கள் சாய்ந்தன. **(கலவைச் சொற்றொடராக மாற்றுக).**
நேற்று மாலை புயல் வீசியதால் மரங்கள் சாய்ந்தன.

6. பூங்குழலி பொம்மை செய்தாள். **(செயப்பாட்டு வினையாக மாற்றுக)**
பொம்மை பூங்குழலியால் செய்யப்பட்டது.

7. அன்பரசன் திருக்குறளைக் கற்றான். **(பிறவினையாக மாற்றுக)**
அன்பரசன் திருக்குறளைக் கற்பித்தான்.

**வினா எண் - 15**

**3. ஒருமைப்பன்மை பிழைகளை நீக்கி எழுதுக**

1. கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவரை மன்னரும் பணிந்தான்.
கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவரை மன்னரும் **பணிந்தனர்.**

2. பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
பெண்கள் பெற **வேண்டியவை** பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

3. இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது.
இப்போது அவர் கையில் கோப்புகள் **இருந்தன.**

4. வயது வந்தோர்க்கு வாக்குரிமை, பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் எனஅம்பேத்கார் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது.
வயது வந்தோர்க்கு வாக்குரிமை, பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் எனஅம்பேத்கார் கூறியதை நாளேடுகள் **புகழ்ந்தன..**

5. புலவர்கள் பொங்கற் புதுநாளில் மாண்பினை உணர்ந்து கொண்டாடினார்.
புலவர்கள் பொங்கற் புதுநாளில் மாண்பினை உணர்ந்து **கொண்டாடினார்கள்.**

6. மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றது.
மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி **போன்றவை.**

7. ஈஸ்ட்மன் என்பார் சுருள்சுருளாகப் பிலிம் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தனர்.
ஈஸ்ட்மன் என்பார் சுருள்சுருளாகப் பிலிம் தயாரிக்கும் முறையைக் **கண்டுபிடித்தார்.**

8. இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.
இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் **பார்க்கின்றார்கள்.**

9. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக்கருவி பயன்படுகின்றன.
திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக்கருவி **பயன்படுகின்றது.**

10. காவிரிப்பூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக்கிடந்தது.
காவிரிப்பூம்பட்டினத்தில் பொருள்கள் **மண்டிக்கிடந்தன.**

11. தமிழர்கள் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.
தமிழர்கள் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் **பெற்றிருந்தது.**

12. ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.
ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் **கொண்டிருந்தாள்.**

13. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா.
மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் **போதாது.**

14. பெண்கள் எல்லாத்துறைகளிலும் பணிபுரிகின்றாள்.
பெண்கள் எல்லாத்துறைகளிலும் **பணிபுரிகின்றார்கள்.**

15. தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்ப பயிலகங்கள் உள்ளது.
தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்ப பயிலகங்கள் **உள்ளன.**

16. அவன் கவிஞன் அல்ல.
அவன் கவிஞன் **அல்லன்.**

www.waytosuccess.org

17. இன்று பேருந்துகள் ஓடாது.
இன்று பேருந்துகள் **ஓடா.** (ஓடாது - ஒருமை , ஓடா - பன்மை)

**வினா எண்.16**

**சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.**

1. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அரசுப்பணி அனைத்துத் துறைகளிலும் கொடுக்கவேண்டும்.
2. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமாம்.
3. ஆசிரியர் பெயரைத்தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்காராக மாறினார்.
4. மேடைப் பேச்சு மிகுந்த பலனைத் தரவல்லது.
5. ஏழைகளுக்குப் பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்றுத் தந்தார்.
6. மக்களை இலட்சியப் பார்வையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையதே மேடைப் பேச்சு.
7. திரைப்படம் எடுக்கப்பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
8. திரைப்படம் மக்களைத் தன்பால் ஈர்த்துக் கட்டிப்போட வல்லது.
9. மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகிறது.
10. தமிழில் வரலாற்றுக் கருத்துகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் காண முடியும்.
11. வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனித நேயம் மலரும்.
12. அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார்.
13. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.
14. பெண்கள் குடும்பத்தைப் பெறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்து செல்லக்கூடாதெனவும் கூறி வந்தனர்.

**வினா எண். 17**

5. **பின்வரும் தொடர்களில் உள்ள வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக.**

1. அவன் வீண் **சிலவு** செய்கிறான் - அவன் வீண் **செலவு** செய்கிறான்.
2. வலது பக்கச் **சுவற்றில்** எழுதாதே - வலது பக்கச் **சுவரில்** எழுதாதே
3. இடது பக்கச் **சுவற்றில்** எழுதாதே - இடது பக்கச் **சுவரில்** எழுதாதே
4. **எகன மொகனயாய்** பேசுகிறான்- **எதுகை மோனையாகப்** பேசுகிறான்.
5. **வேர்வை** சிந்த உளைக்க வேண்டும் - **வியர்வை** சிந்த உழைக்க வேண்டும்.
6. அவன் **வேப்பிலை** பறித்தான் - வன் **வேப்பந்தழை** பறித்தான்
7. தம்பி **இங்கிட்டு** வா - தம்பி **இங்கு** வா
8. என் **உசிர்** நீ தானே! - என் **உயிர்** நீ தானே!
9. அவர்கள் இருவருக்கும் இடையே **விவாதம்** நடந்தது.
அவர்கள் இருவருக்கும் இடையே **உரையாடல்** நடந்தது.
10. காலையில் **நாஷ்டா** சாப்பிட்டான்.
காலையில் **சிற்றுண்டி** சாப்பிட்டான்.
11. **ஆத்தங்கரை அருகாமையில** நாகரிகம் தோன்றியது.
**ஆற்றங்கரை அருகில்** நாகரிகம் தோன்றியது.

6. **பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக.**

1. வேலன் சுயதொழிலில் அதிக **இலாபம்** ஈட்டினான்.
வேலன் சுயதொழிலில் அதிக **வருவாய்** ஈட்டினான்.
2. அந்த **விஞ்ஞானியின்** கண்டுபிடிப்புமிகவும் புதுமையானது.
அந்த **அறிவியல் அறிஞரின்** கண்டுபிடிப்புமிகவும் புதுமையானது.
3. அனைவரையும் **உண்ணாவிரதப்** போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.
அனைவரையும் **உண்ணா நோன்புப்** போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர்அழைப்புவிடுத்தார்.

www.waytosuccess.org

4. **அலங்கரித்துக் கொள்வதில்** பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.
**ஒப்பனை செய்து கொள்வதில்** பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.

**பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக.**

1. அங்கத்தினர் - உறுப்பினர்
2. க்ஷேத்திரம் - திருத்தலம்
3. விக்கிரகம் - தெய்வ உருவம்
4. யாத்திரை - பயணம்
5. மார்க்கம் - வழி
6. ஷர்ட் - சட்டை
7. காஸ்ட்லி - விலைமிகுதி
8. மேட்ச் - போட்டி
9. வின் - வெற்றி
10. அதிகாரி - அலுவலர்
11. அதிபர் - தலைவர்
12. அந்நியர் -அயலார்
13. அபிஷேகம் - குடமுழுக்கு
14. உத்தரவு - கட்டளை
15. குமாரன் - புதல்வன் , மகன்
16. அலங்காரம் - ஒப்பனை
17. சங்கம் - மன்றம்
18. நஷ்டம் - இழப்பு
19. ஜாமீன் - பிணை
20. விஞ்ஞானம் - அறிவியல்
21. பரீட்சை - தேர்வு
22. பௌதீகம் - இயற்பியல்
23. வாலிபர் - இளைஞர்
24. சம்பிரதாயம் - மரபு
25. தாலுகா ஆபீசு - வட்டாட்சியர் அலுவலகம்
26. போஸ்ட் ஆபீஸ் -அஞ்சலகம்
27. போலீஸ் ஸ்டேஷன் - காவல் நிலையம்
28. நிபுணர் - வல்லுநர்
29. மந்திரி - அமைச்சர்
30. மாமூல் -வழக்கம்
31. சுகாதாரம் -ஆரோக்கியம்
32. ஹாஸ்டல் - விடுதி
33. அபூர்வம் - அரிது
34. நாஷ்டா - காலை உணவு
35. பைசல் செய் - தீர்த்து வை
36. கஜானா - கருவூலம்
37. தேசம் - நாடு
38. அனுபவம் - பழக்கம்
39. தாதியர் - செவிலியர்
40. சரித்திரம் - வரலாறு
41. உபகாரம் - உதவி
42. மகாராஜா - பேரரசன்
43. கோர்ட் - நீதிமன்றம்
44. ஞாபகர்த்தம் - நினைவு
45. கிரிமினல் - குற்றம், குற்றவாளி
46. ஆஸ்தி - செல்வம்
47. உத்தியோகஸ்தர் - அலுவலர்
48. விஷயம் - தகவல் , செய்தி
49. சாதம் - சோறு
50. சிபாரிசு - பரிந்துரை
51. நமஸ்காரம் - வணக்கம்
52. பஜனை - கூட்டு வழிபாடு
53. ஜனங்கள் - மக்கள்
54. ஜனாதிபதி - குடியரசுத்தலைவர்
55. பஸ் - பேருந்து
56. காலேஜ் - கல்லூரி
57. வில்லேஜ் - சிற்றூர்
58. பஜார் - கடைத்தெரு
59. ஆஸ்பத்திரி - மருத்துவமனை
60. டாக்டர் - மருத்துவர்
61. பிரார்த்தனை - வழிபாடு
62. ஓட்டல் - உணவகம்
63. கம்ப்யூட்டர் கோர்ஸ் - கணினிக்கல்வி
64. சேவை -தொண்டு
65. கோஷ்டி - கூட்டம் , குழு

**வினா எண்.20**

7. **மரபுத்தொடரும் பொருளும்**

1. கொடிகட்டிப் பறந்தார் - சிறந்து விளங்கினார்.
2. முதலைக்கண்ணீர் - பொய் அழுகை
3. ஆகாயத் தாமரை - இல்லாத ஒன்று
4. கம்பி நீட்டல் - சொல்லிக்கொள்ளாமல் செல்லுதல்
5. கானல் நீர் - பொய்யான தோற்றம்
6. அவசரக்குடுக்கை - எண்ணித் துணியாதார்
7. சீட்டுக்கிழிந்தது - வேலை போய்விட்டது
8. கயிறு திரித்தல் - பொய்யானவற்றைக் கூறுதல்
9. ஓலை வந்தது - அழைப்பு வந்தது
10. கம்பி எண்ணுகிறான் - சிறையில் இருக்கிறான்
11. ஆயிரங்காலத்தப் பயிர் - நீண்ட காலத்திற்கு உரியது
12. வாழையடி வாழையாக - தலைமுறை தலைமுறையாக
13. வாயிம் வயிறுமாக இருக்கிறாள் - கருவுற்று இருக்கிறாள்
14. மூக்கும் முழியுமாக இருக்கிறாள் - அழகாக இருக்கிறாள்
15. கூட இருந்தே குழி பறித்தல் - உடனிருந்தே கெடுத்தல்.